**எண்.74/2021** **நாள் 24.12.2021**

**<u>தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்</u>**

**<u>எண்.3, தேர்வாணையச்சாலை, சென்னை - 600003</u>**

**<u>செய்தி வெளியீடு</u>**

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான கட்டாயத் தமிழ் மொழி தகுதித் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான தேர்வுத்திட்டம், பாடத்திட்டம் ஆகியவை கீழ்க்கண்டவாறு தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

1. கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வு பாடத் திட்டம் மற்றும் மாதிரி வினாத்தாள் (விரிந்துரைக்கும் வகை)
2. கட்டாயத் தமிழ்மொழித் தகுதித் தேர்வு பாடத்திட்டம் மற்றும் மாதிரி வினாத்தாள் (கொள்குறிவகை)
3. கட்டாயத் தமிழ்மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு பாடத்திட்டம் மற்றும் மாதிரி வினாத்தாள் (கொள்குறிவகை)

இவற்றில் விரிந்துரைக்கும் வகை தமிழ் மொழித் தகுதித்தேர்வில் (தொகுதி II & IIA உட்பட) திருக்குறள் தொடர்பான “கட்டுரை வரைதல்” எனும் பகுதி சேர்க்கப்பட்டு, திருத்தப்பட்ட பாடத்திட்டம் தேர்வாணைய இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டுள்ளது.

பி. உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.
செயலாளர்